**UNHCR இனால் நடாத்தப்படும் நடமாடும் பதிவுச்சேவை ( Mobile Registration ) சம்பந்தமாக அகதிகள் மற்றும் தஞ்சம் கோருவோர்களுக்கான அறிவுரைகள்.**

மலேசியாவில் வசிக்கும் பதியப்படாத தஞ்சம் கோருவோர்களுக்காக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையகத்தால் நடாத்தப்படும் நடமாடும் பதிவுச்சேவை.

- இப்பதிவு நடவடிக்கைகள் செப்டெம்பர் 26ம் திகதி தொடங்கி வருட இறுதி / 2014ம் வருட ஆரம்பம் வரை, பல கட்டங்களாக பல்வேறு இடங்களில் நடைபெறும்.

- இன்னும் பதியப்படாத ஒரு பகுதி தஞ்சம்கோருவோர்களுக்கு சர்வதேச பாதுகாப்பு வழங்குவதே இந்நடவடிக்கையின் நோக்கமாகும்.

- UNHCR இல் பெயரை பதிவு செய்து இன்னும் பதியப்படாமல் இருக்கும் மலேசியாவில் வாழும் தஞ்சம் கோருவோர்களுக்காக மாத்திரம் நடாத்தப்படும் பதிவு நடவடிக்கையே இது.

- பெயர்பட்டியலில் உள்ளவர்களை UNHCR இனால் நேரடியாக தொடர்புகொள்ளப்பட்டு அவர்களுக்கான குறியீடு ( Code ) மற்றும் இப்பதிவுக்காக செல்லவேண்டிய இடம் பற்றிய தகவல்கள் வழங்கப்படும்.

- உங்களுக்கு குறியீடு வழங்கப்பட்டு ஆனால் பதிவுக்காக செல்லவேண்டிய இடம் நினைவில்லையெனில், நீங்கள் நடமாடும் பதிவு பிரிவுக்கான 0126534791 மற்றும் 0126534826 ஆகிய அவசர அழைப்பிலக்கங்களை தொடர்புகொள்ளலாம். இவ்விரு இலக்கங்களும் தினசரி காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும்.

- இப்பதிவு நடவடிக்கையானது UNHCR இனால் முன்பே குறியீடு வழங்கப்பட்ட தஞ்சம் கோருவோர்களுக்காக மட்டுமே மேற்கொள்ளப்படும். UNHCR இனால் வழங்கப்படும் இக்குறியீடு இன்றி பதிவு நடவடிக்கை நிகழும் இடத்துக்கு வருகை தரும் தஞ்சம் கோருவோர்கள் பதியப்படமாட்டார்கள். அவர்கள் அடுத்தகட்ட பதிவு நடவடிக்கை வரை காத்திருக்க கேட்கப்படுவார்கள்.

- அகதிகளுக்காக UNHCR இனால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் இலவசம் என்பதை நினைவில் கொள்க.

நடமாடும் பதிவு சேவையின் திகதி மற்றும் நிகழும் இடம் சம்பந்தமான தகவல்களுக்கு நடமாடும் பதிவுச்சேவையின் அவசர அழைப்புப்பிரிவின் தொலைபேசி இலக்கத்தை அழைக்க: 0126534791 மற்றும் 0126534826. ( இவ்விலக்கங்கள் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும் )

நடமாடும் பதிவுச்சேவை பற்றிய பொதுவான தகவல்களுக்கு UNHCR இன் சமூக மேம்பாட்டு பிரிவிலக்கத்தை அழைக்க: 03 2118 4800

United Nations High Commissioner for Refugees. 570, Jalan Bukit Petaling, 50460 Kuala Lumpur

Tel: 603 2118 4800 Fax: 603 2141 1780 Email: mlslu@unhcr.org